SUPPLEMENT TO THE BRAHMAVIDYA.

# ப்ரம்மவித்தியா.

## அநுபந்தம்.

லக-ம்புத்] சிதம்பரம். ஏவிளம்பி௵ ஆனி௴ ௧௯ உக்கு 1897௵ ஜூலை௴ 1 உ [இல-௩

### வைதிகசந்திரமௌலி.

### மகாபாசுபதாஸ்திர பராவர்த்தனப்பிரயோகம்

முன்தொடர்ச்சி

———

இடையே "பஹுநவெடிகிரிவாகஸிஷ்யதி" இதை யறியாதவன் வேதத்தாலடையும் பெரும்பேறுயாது என்றும் பலவிதமாய் வைதிகவித்தையே சொல்லப்பட்டது. மேலும் மேற்காட்டிய சுவேதாசுவதர வுபநிடதத்தில்கண்ட "பிரம்மவித்தையை பிரம்மதேவன் காயத்திரியுடன் அடைந்தான்" என்று சிவபுராணம் பறையறைதலால், அது வைதிக விதிப்படி உபநயனம் செய்யப்பெருதவன் அதிலதிகாரியல்லவென்று தெற்றெனப்புலப்படுதலாலும், கூர்மபுராணத்துச் சுசீலோபாக்கியானத்துள்ளபடி மூவருணத்தவருக்கேயதிகாரம் அவ்வுபநிடதத்தில் விதித்தலாலும் அதில்சொல்லப்பட்ட அத்தியாச்சிரமாதிதருமங்களுக்கு உபநயனஸம்ஸ்காரமே பரமாதிகார சம்பத்தியாதலாலும் அதனாலேயேவைதிகன் வைதிகஸ்மார்த்தாக்னிஹோத்திர விரஜாபஸ்மாதிகார பரிபூரணன் என நாட்டப்பட்டமையானும், முன்னுதகரித்த சூதசங்கிதை வசனப்பிரகாரம் தந்திரங்களில் வைதிகனுக்கு வேண்டியது சிறிதும் இல்லையாதலாலும், அவ்விதம்தாந்திரிக விரதம்வைதிகனுக்குப்பாதஹேதுவாதலாலும், இப்பாசுபதர்க்குக்கேவலவுபநயனத்தால் "பஸ்மாதிகாரம் சித்திக்காது தந்திரதீக்ஷையாற்றான் சித்திக்கும்" என்றது அடிசாய்ந்து முறிந்ததுகாண்க. ஆதலாற்றான் இவ்வுபநிடதம் ஐந்தாம் அத்தியாயம் ஜீவப்ரம்மாபேதத்தை 'அங்குஷ்டாதிவாக்கியங்களால்' காட்டிய இவ்விதவறிவுளார் யெவிதுவெஸஜஹாஸநாம் 'எவரறிந்தவர் அவர்சரீரத்தைவிட்டார்' என்று விதேசமுக்தியே இப்பிரம்மவித்தையின் பயன்யென்றது. மேலும் 'வணகொஹம்வொஹவநவஸ்யாவஸ்யெயு' என்பதாதியால் சர்வோபாதானத்துவத்தை ஸ்தாபிக்கும் இவ்வுபநிடதம் எஞ்ஞான்றும் ஸர்வவேதவிருத்தகேவல நிமித்தவாதஞ்செய்யும் அவைதிகாகமங்களைத்தழுவுவது கூடாது.

சௌரபுராணம் 27-ம் அத்தியாயத்தில்.

சுசீலன் சுவேதாசுவதர மகரிஷியிடம்பெற்ற பாசுபத ஞான வரலாற்றை வினவியரிஷிகளுக்குச் சூதர் கருணைகூர்ந்து:—

யொஸளஶிவம்பிநஃவாதஃ வ்யூஹவயராஶுரெ ரதஃ। கயிதுவியிவவெஷாநாம் வெராஹுரோஸ்ரிதஃ॥ விவாரஸ்ரூயவெதஸ்யகஷாவிகஸரோஹஜிஜாஃ ப்ரவருத்தம்வநிவருத்தம்வ கஶெயவிவியம்ஸ்யதி॥ தயொராத்யம்திகீரோக்திஃ ரரகெநஹவிஷ்யதி॥ இதி ஸம்விதுரநவாஜமாரஹிரெவஜிஸி॥

"சிகண்டிமகாராஜன் குமாரனாகிய சுசீலன் வேதங்களை விதிவழுவாது கற்றுணர்ந்து பிரமசரிய ஆசிரமத்திலிருந்தான். அவனுக்கு நன்மைக்காகவே எந்தவழிகொண்டு பிரவிருத்தி நிவிர்த்தியென்னு மிருவகைக்கன்மங்களையும் முற்றும் விடப்பெறுவோம் என்று ஓர்விசாரம் அவனது நன்மைக்காகவே தோன்றியது. இங்ஙனம் சிந்தித்து இமோத்பர்வதத்தையடைந்தான்' என்றெடுத்து அவன் அப்பருவதத்தில் சுவேதாசுவதர மகாரிஷியைக்கண்டு வழிபட்டமுறையை வர்ணித்து, பிறகு

வெஸாநாம்ரஹஸ்யவாதுகெவராஜாநம்ரநிவாம்ஹவஃ। காரயிகவாயஸந்யாஸம்தஉளயொமரநாதரஃ॥ பததாஶாவதம்யொமம் கதாஶுரிதிஶுதி॥ மாஹம்தஸ்வவெஷஷவெதவிஹிநாஷிதம்॥ கநாஶுஹாநாநெஹஸ்யவொவிவாஶாவெதாஹவகு॥ வெஷாஹுரஸாதஸ்ராஜொஹஸநிஷொஜிதெஜியஃ। ஸந்யாஸவியிரோஸ்ரிதுஸாஶீஜொரோக்திராநுவெகு॥

"அவர் அவ்வரசனையனுக்கிரகித்து (ஞான) புத்திரனாகப் பாவித்து அவனுக்குச் சன்னியாசமளித்து, அதியுத்தமமும் பாசுபதமெனப்படுவதும், அத்தியாச்சிரமமெனக் கேட்கப்பட்டதும், சர்வவேதங்களிலும் ரகஸ்யமாயுள்ளதும், வேதமறிந்தவர்களால் அனுஷ்டிக்கப்பட்டயோகத்தை உபதேசித்தார். அம்முனிவர் அனுக்கிரகத்தால் அவன் பாசுபதனானன். வேதாப்பியாசநிஷ்டனும், சாந்தனும், பஸ்மநிஷ்டையுள்ளவனும், புலனடக்கம்பெற்றவனுமான சுசீலன் சந்நியாசமார்க்கத்தாலே முத்தியடைந்தான்' என்று நிரூபிக்கப்பட்டது. இதனால் அத்தியாசிரமியென்பவன் சந்நியாசியென்றும் அத்தியாசிரமமென்பது அவர்க்குரியதருமமென்றும் ஆண்டு சுசீ

லன்பெற்றதும் சுவேதாசுவதரமுனிராஜன் உபதேசித்ததும் அஃதேயெனத் தெற்றெனப்புலப்படுதலால் யாம்கூறியபடி இவ்வுபநிடதம் சந்நியாசிகளாதி மகாவிரதர்களனுஷ்டிக்கத் தக்க சுத்தவைதிக சம்பிரமத்தை யுணர்த்துவதென வயிரப்பூச்சாயிற்றென்க. ஆதலாற்றான் சங்கர சங்கிதையிறுதியில் சிவாகமங்களைப் பிரசம்ஸைசெய்யுமிடம் ஜீவன்முக்தியே அதற்குப்பயனென்றுகாட்டி விதேககைவல்யசாதகப் பிரம்ம வித்தையாகிய சுவேதாசுவதரத்திற்கும் அதற்கும் உள்ள நீசேரச்சபாவத்தை நன்குபுலப்படுத்தியது.

சங்கரசங்கிதைஉபதேசகாண்டம் 89-ம் அத்யாயத்தில்,

யொயீத்ரூவதாரொவெஷாநுஸஷடம்பவஷகுூறாநு
வாராணந்யாயமீமாம்ஸாயஉபுஶாஸ்த்ரவாரஸ்ரநு
ஸவபுரமாயூதக்ஞுஜ:ஸயொஜாதக்ஞவிக் ।
வதிம்வாஶாநுவஶும்ஶெவதத்வலக்ஷணமுகூஷிதாநு
ஜ்ஞாக்ஞாஜ்ஞாநெதரெவைநவஜ்ஞாதாஹம்ஜ்ஞெயம்ஶிவ:
ஜ்ஞாநம்வஹாதநிஷ்டஹிவெகவிஷயம்ததம்
ஜ்ஞாநெகுதசுத்திதயம்விசாநுத்தநிஷொவிஜிதெந்த்ரிய:
ஸஜீவனெவமுக்தஶ்வொவகுஶிவஸம்மத:॥

“எவன்நான்குவேதங்களையும் ஆறு அங்கங்களுடனும் பதக்கிரமங்களுடனும் புராணங்கள் நியாயம் மீமாஞ்சை யிவற்றுடனும்கற்றும், ஸர்வாகமங்களின் அர்த்தத்தை உண்மையாய்தெரிந்தும், பலசமயங்களின் உண்மையறிந்தும், பதியையும் பாசங்களையும் பசுக்களையும் அவற்றின்லக்ஷணத்துடன் அறிந்து அதேஞானத்தால் ‘ஞாதாயான்’ ஞேயன் ஈசுவரன்’ சிவைகவிஷயமான அந்தஞானமும் ஆன்மாவிலுள்ளது. இம்மூன்றையும் அறிந்தவன் அறிஞனெனப்படுவான். அதனிடம் நிட்டைகூடிப் புலன்களைவென்று அவன் உயிருடனிருந்தே முக்தனும் மோசகனுமாய் சிவசம்மதன் என்றது. அதேஅத்தியாயம் ஆரம்பத்தில்

விஹரெத்ஞவநிஷ்டாவாந்ஜீவந்முக்த:ஸ்ஸம்மத:॥

‘நிஷ்டையுடன்கூட சஞ்சரிக்குமவன் ஜீவன்முக்தனும்’ என்றும் கூறியதுகாண்க. இவ்வசனங்களில் முதலில்குறிக்கப்பட்ட வசனங்கள் தமச்குச்சாதகமாமென நம்பி இலங்கைவாசியார் வெளிவந்தது, அன்று இவரூர் அரசன்தம்பி கும்பகர்ணன் நித்தியத்துவவரம் கேட்டாற்போலாகின்றது. பாருங்கள் ‘யொயீத்ரூ’ முதல் ‘ஶிவஸம்மத:’ வரை அவர் எடுத்தசித்தாந்த வசனம் இதில் “சிவைகவிஷயமான அந்தஞானமும்’ என்ற சொற்றொடரை நோக்கிற்றென்றார் இவர் சித்தாந்தச்சிதைவு இங்கு நிச்சயமாய் வெளியாகும். எங்ஙனம், எனின் அமரிக்யுடன்கேட்க கூறுவாம். இங்கு அந்தஞானம் “தஜ்ஜ்ஞாநம்” என்று சுட்டப்பட்டஞானம். அடுத்த முன்வாக்கியத்தில் “ஜ்ஞாதாஹம்ஜ்ஞெயம்ஶிவ:” என்ற வாக்கியத்துட் பெறப்பட்டதே எனக்கட்டாயம் ஒப்பவேண்டும். இது ஞாதாஞேயம் எனப்படும் ஜீவேசுவரர்கள் விஷயமாகக்கொண்ட ஞானம். உலகத்தில் ‘இஃதுகுடம் அஃது படம்’ என்றஈரறிவும் குடத்தையும் படத்தையும் விஷயமாகப்பெற்றதுபோல் இவ்வீரறிவும் ‘சிவைகவிஷயம்’ என்றதனுல் சிவனையே விஷயமாகக்கொண்டது எனின் ஜீவேசுவரர் இருவரும் சிவனுனலன்றி இவ்வறிவு சிவைக விஷயமாகாதே. சிவைகவிஷயம் என்றால் சிவனையேவிஷயமாகக்கொண்டது என்பதேபொருள். மேலும் “இம்மூன்றையும் அறிந்து அறிஞனுருக’ என்றது. இதனுல் முன்பு பேதஞானம் எனப்படும் துவிதவறிவுண்டாம் முறை ‘ஞாதாயான்’ என்பதாதியால் குறிக்கப்பட்டதென்றும், பின்னர் ‘சிவைகவிஷயம்’ என்றதனுல் காரியகாரணோபாதிகளைக் களைந்திடவே, எஞ்சியது சிவமேயாகவே அதனறிவுகுறிக்கப்பட்டதென்றும், இம்மூன்றையும் என்றது பசுபாசபதிகளை என்றபொருள்மேனின்றது என்றும், ‘அறிஞன் அதனிடம் நிட்டைகூடி’ என்றது பேதவாசனையெல்லாம் இம்மூவறிவேயாதலால் அது ஒழிந்தவிடம் சிவமாகவே நின்றது என்றும், ‘உயிருடன்’ என்பது சரீரமுள்ளவரையுபசாரமுக்தனும் உண்மை அச்சரீரம் பரோபகாரார்த்தமாகையால் மோசகமும் ஆம் என்றும் பொருள்கொள்ளவேண்டும். இவ்விஷயங்களுக்குப் பிரமாணவறிவு இங்குசொல்லவேண்டுவது அவசியமாகவே அதற்காக முறையாய்ப் பிரபலப் பிரமாணங்களை முன்னமைத்து, துர்ப்பலங்களைப் பின்னமைத்துக்காட்டி வருவதில் ‘வேறுசமயங்கள்’ என்று பொதுச்சொல்லால் கூறப்பட்ட அவைதிகசமயங்களின் முன் இவர்போன்றதாந்திரிகர்கொண்டாடும் ஆகமங்கள் அமைக்கப்பட்டன. அதுவே உசிதம் .எதனுல் எனில் அவ்வத்தியாயத்துவக்கத்தில்:—

ஈவஸ்தாவஞ்சகஞ்சைவ கதிதம்வெதவாதிபி:॥

“ஐந்து அவஸ்தைகளை வேதவாதிகள் உபதேசித்தார் என்று வைதிகமதமே எடுக்கப்பட்டமையானும் மேல்அத்தியாயத்தில் முடிவுரையில்

இதம்வெதவிதொநித்யம் பம்டிதாஃபயெஶ்வரா:॥

‘இதை வேதங்களறிந்த பண்டித சிரேஷ்டர் நித்யம் படிப்பார்’ என்று முடித்தமையானும் இடைப்பட்டதும் அவ்வழிப்பட்டதெனவே பொருட்படுத்துவது நியாயமாதலாலுமென்க. மேலும் இச்சங்கரசங்கிதை அடிமுதல் முடிவரை வேதவேதாந்தங்களை மிகச்சிறப்பித்துவந்தமையானும் உபக்கிரமாதி விருத்தமான ஓர்துரார்த்தம் இச்சுலோகத்துமட்டும் சொல்வது நியாயமில்லை. இச்சம்மிதை அடிமுதல் வைதிகம் என்பதற்குப் பிரமாணங்கள் அளவுக்கடங்காவாயினும் அவற்றுள் சிறந்த சிலவற்றைக்காட்டுவோம். சங்காசங்கிதை தக்ஷகாண்டம் 11-வது அத்தியாயத்தில் ததீசிவசனம்:—

ஶிவஏவெதிவெதாஜ்ஞாநாநெந்யாஸ்தீதிவதந்திஹி॥

“சிவனே ஒருவன் வேறெவனுமல்லன் என்று வேதங்கள் சொல்லுகின்றன’ என்றும்

ஜ்ஞாநவஹவாநஸ்யாஸெநவதத்த்வம்॥

‘வேதபகவானே இத்தத்துவத்தைப் பன்முறை எடுத்துரைக்கின்றார்’ என்றும்

வெதமாகம்வரி தஜவதபெதகாவயெஹவாநு

'வேதமார்க்கத்தைவிட்டுக் குமார்க்கத்தில் நீயிருக்கிருய்' என்றும் சிவஞானம் வேதாந்தங்களாற்றான் சித்திக்கும் என்றும் சிவன்பெருமையைச் சிறிதுங்குறைவின்றி வேதங்கள் தானே நிரூபிப்பனவெனவும் வேதமார்க்கமல்லாத மார்க்கங்களெல்லாம் குமார்க்கங்கள் என்றும் ஸ்பஷ்டமாய் வெளிப்படுத்தியது. மேலும் 12-ம் அத்தியாயத்தில் அதேமுனிவர் வசனம்

ஸஞவஹவிஷ்ணுதீநாம் தாத ஜநகஸ்யம்|

'அவனே பிரம்மவிஷ்ணுமுதலிய தேவர்களை உண்டாக்கிய தகப்பன்' என்று எடுத்துப் பிறகு

வெதாநஸாவயாகஸ ஸஷடங்மாநஹெஸ:||

"ஆறு அங்கங்களுடன் வேதங்களை அத்யயனஞ்செய்வித்தார்' என்றும் ஸ்பஷ்டமாய் ஈசன் உலகசிருஷ்டியில் ப்ரம்ம விஷ்ணுக்களுக்கு வேதவெதாந்தங்களையே உபதேசித்தார்" எனத்தேற்றியது. மீண்டும்

கெவஸ்யாயயஸவெல் ஶிவஹக்தா:ப்ரஜாவதெ||

"ஓ பிரம்மதேவனே! அச்சிவபக்தர் எவரும் கைவல்யத்தைப்பெற்றனர்' என்றுபதேசித்தது இக்கைவல்யம் என்பது அத்யந்தைக்யமே எனக்காட்டவேண்டிய மேலே.

ததஸ்ஸமவா நீஶ:வரோதாஶிவஸ்யம்

நாநெநாதொதஸ்மிஹாஷெவா ஊஷ்டாஶ்ரோதாவ ராதுர:। உதி வெதாஸவாக்யாநாம் நிஷ்டாகாஷ்டா ஜஹெஸ்ரெ | வதிஸ்ஸவஹமவாநுதஷநெஸுவஶுவ: ஸுதா:| நிஸ்ரிதம்ஸ்ஹணாவஶவலெலம்வெதாநு ஸாரத:||

"ஆதலால் பகவானுனசிவனே ஈசன்; பரமாத்துமா அம்மகாதேவனிலும் வேருய் 'திரஷ்டாவும் சுரோதாவும், (பரமாத்மாவாயஜீவஸாமான்யம்) மேலானவரும் எவனும் இல்லை. இதே வேதாந்தவாக்கியங்களுக் கீசனிடம் ஒப்பமுடிந்த கருத்து. அப்பரமாத்துமாவேபதி; மற்றவர் பசுக்கள். இப்பொருளும் பிரம்மதேவனால் முற்காலத்தில் இப்படியே 'வேதங்களையனுசரித்து நிச்சயிக்கப்பட்டது' என்ற வசனங்கள் பலவெழுந்தன. இவற்றுள் திரஷ்டா=காண்பான், சுரோதா=கேட்பான், காண்பானும் கேட்பானுமாய் எல்லாப்பிரமாதாக்களும் எடுக்கப்பட்டார்கள். வேதாந்தங்கள் பிரமாணங்களாகக் காட்டப்பட்டன. பிரமேயன் ஸ்ரீமகாதேவன்; பிரமிதியே அவனிலும்வேருய் பிரமாதாவில்லை என்றவறிவு' என்ருவதால் முன்னர் எடுத்துக்காட்டிய 'சிவைகவிஷயஞானம்' எனப்படும். சிவஞானம் வேதாந்தங்களிலேயே ப்ரம்மாதிகளுக்குண்டாயதன்றி அவைதிகாகமங்களிலல்லவென்ருயிற்று, அதுவே விரிக்கப்பட்டது 'வேதங்களையனுசரித்து' என்று. இம்மட்டோ! அம்மகா சாம்பவசிகாமணியாகிய ததீசி மாமுனிவர் இட்டசாபத்தில்

வெதமாகெமகவிஸவாஶிவஷிஷவிநிஜகா:||

"வேதமார்க்கத்தில்மாத்திரம் விமுகர்களாய் சிவப்பிரியர்களை நிந்திப்பவர்களாய் ஆவீர்கள்' என்றும் ஸ்பஷ்டமாய் வேதமார்க்கத்தைப் புறக்கணிப்பவர் சாபக்கிரஸ்தர் எனப்பட்டார். அட்படியே துர்வாஸமகரிஷி புண்டரீகனைச் சபிக்கும்பொழுதும்

நிஜகஸ்வெஷிகம்மாமகம் காஶாஸாஸக்தோநஸ:|

"விபரீதநூல்களைக்கற்று மறைவழியிகழும் மாபாவியாவாய்" என்றுள்ளவசனத்தால் ஸ்பஷ்டமாய் வேதமார்க்கவிருத்தசாஸ்திரம் எனப்படும் அவைதிகாகமாதிகள் பாபஹேதுக்கள் எனப்பட்டன. மேலும் விபூதிமாகாத்மயம் சொல்லப்புகுந்த உபதேசகாண்டம் 9-ம் அத்தியாய்த்தில்.

யயாதெவஸ்யாஹாத்ம்யம் ஞெஜயம்வாவதீவதெ:| தமெவஸஸந:வெராக்தம் வெதவெதாம்மவாரமெ:||

"எங்ஙனம் தேவனாகிய பார்வதீபதியின் பெருமை அறிவதற்கரியதோ அங்ஙனமே திருநீற்றின்மகிமையும்' என்று வேதவேதாங்கங்களை முற்றுமறிந்தவர் சொல்வார். என்றும் ஶ்ருத்யாவிதியதெயஸாதத்யாதீவதிதொஹவெக

வேதத்தால் விதிக்கப்பட்டமையால் அதைவிட்டவன் பதிதனுவான் என்றும் சூதசங்கிதை பிரம்மோத்தரகாண்டம் ஸநத்குமாரசங்கிதை வாயுசங்கிதை பாத்மம் இவைகள் குறித்தாற்போலவே "ஜாபாலெரொதரெணவஶெதாஶதர ஶாவிந: கயவஶிரவிஷிதா:" என்பதாதிபல வசனங்களால் திருநீறு வைதிகமே எனகாட்டி ஸ்ரீஜாபாலோபநிஷத்திலுள்ள கதார்த்தவாதத்தையும் விரித்தவசனம் அளவிறந்தன. இவ்வளவிலும் திருநீறுதரித்தல் அவைதிகாகமோக்த தீக்ஷையின்றிக் கூடாதாயின் மேற்கண்ட பிரமாணங்கள் ஏதாகிலும் அதன் அவசியத்தைக் குறித்திருக்கும் அங்ஙனமின்மையால் இந்தச் சங்கரசங்கிதைசொல்லும் சிவதீக்ஷை வைதிகசிவாகமத்துளளதே. அங்ஙனம் திருநீறும் வைதிகமே. பின்னும் அனேகவசனங்களாலும் பிரகரணத்தாலும் உபமன்யுபகவான் கிருஷ்ணபகவானுக்குச் செய்வித்ததீக்ஷை வைதிகமே என ஸ்ரீசிவபுராணப் பிரமாணங்கொண்டு காட்டினேம். அந்ததீக்ஷையே இச்சங்கரசங்கிதையிலும் உபதேசகாண்டம் 80-ம் அத்தியாயத்தில்

உதாநீம்ஜஹக்தாஶிகாவஜெநாஜஹாதந:
ஶிவதீக்ஷாவநிவஷ்தாஶிவாமஜவிஶாரதாக|
ஹஸயாஶீவஸதம்வீயவாநுஹஸஸம்யாத:||

"இப்பொழுது எனது பக்தசிகாமணியும் மகாத்துமாவும் சிவாகமபண்டிதருமாகிய உபமன்னுவிடம் இவருக்குச் சிவதீக்ஷைமுடிந்தது, எப்பொழுது திருநீறணிந்து வருகிருன், திருநீறணிபவன் வீர்யவானுவான்' என்று சொல்லப்பட்டது. முன்னர் எடுத்துக்காட்டிய சூதசங்கிதை வாயுசங்கிதை வசனங்களால் வைதிகபஸ்மமேமுதல்மூவருணத்தாருக்குரியதாதலாலும் 'வீயவாநுஹஸஸம்யாத:' என்று

ஜாபாலமந்திரத்தைத் தழுவியமையாலும், உபதேசித்தவர் வைதிகசிவாகமப் பிரசாரகாரன 'ருரு, ததீசி, அகஸ்தியர் உபமன்னு' என்றநால்வருள் ஒருவராகையாலும் அவர் எனக் குறிக்கவே "சிவாகமவிசாரதாத்" என்றவிசேடணம் அமைக் கப்பட்டமையானும் யாம்கூறிய பொருளே நியாயம் என்க

மேலும் இச்சங்கிதை சூரபத்மன் தவம் சொல்லுமிடம் அதுஸ்பஷ்டமாய் குண்டமண்டலவேதிகைகளுடன் ஏற்பட் டசிவயாகமென வர்ணிக்கப்பட்டமையால், தாமஸாசுராதிக ளுக்கே ஆகமாதிகாரம்என்றேற்படுகிறது. ஆதலாற்றான் அவை திக வழியொழுகிய பாணராவணர்கள் வைதிக விரஜாதீக்ஷி தர்களான ஸ்ரீமத் கிருஷ்ணன் ஸ்ரீமத் ராமமூர்த்திகளால் தண் டிக்கப்பட்டார்கள் என்பதுஎல்லோருக்கும்விசதமாம். மேலே இந்தவிஷயம் விரிக்கப்படும். ஆதலாற்றான் ஆகஸ்த்யசிவ பக்தவிலாசத்தில் சிவபக்தி ஸாத்துவிகம், ராஜஸம், தாமசம் என மூவகைப்படும் என்றும் அவற்றுள் தாமசத்தினும் ராஜஸம்மேல்; அதிலும் சாத்துவிகம் மேலாம் என்றும் நிரூபிக்கப்பட்டது. ஆகையாற் றான் ஸ்ரீ சிவபாதஹிருதய தீக்ஷிதர் அவர்கள் மாரஸோமயாஜிகள், நீலகண்டதீக்ஷிதர் ஆதிகள், அனேகதில்லை திரிஸஹஸ்ரமுனிகள் எனப்படும் தில்லைவாழந்தணர்களும் மீக்ஷியற்ற பரமானந்தகைவல்யம் பெற்றார்கள்என்பது ஸ்பஷ்டம். இங்ஙனம், ருத்திர பசுபதியார் முதலியவனேகர் வைதிகமந்திரங்களால் சித்திபெற்றதாகச் சொல்லவந்த ஸ்ரீ சிவபக்தவிலாசம் மேற்கண்ட அறுபத்திமூன்று உண்மை நாயன்மார்களில் ஒருவரேனும் சைவதீக்ஷை பெற்றவர்களுள் முக்கியடைந்ததாகச் சொல்லாதொழிந்தது. ஸ்ரீமத் சர்வஞ்ஞசிகாமணியாய் கவுணியபிரானும் தனது அருமைத் தாதைக்கு அகமகிழ்ந்து அகிலேசனிடம் பொருள்யாசித்து சோமயாகம்செய்வித்தார் என்று பக்தவிலாசங்கள் தெரிவித்தனவேயன்றி எங்கேனும் எவரேனும் எவருக்கேனும் தந்திரோக்த பாசுபத தீக்ஷைசெய்வித்ததாகவாவது அல்லது அவ்விததீக்ஷைக்கீசன் உத்திர மளித்ததாகவாவது தெரிவித்தனவல்ல நிற்க; புராணங்களிலும் அநேகமாகப் பஸ்மப்பிரஸ்தாரம் உள்ளவிடமெல்லாம் அக்னிஹோத்திர பஸ்மம் விரஜாபஸ்மம் முதலிய வைதிகபஸ்மங்கள் எடுத்து நிரூபிக்கப்படுகின்றனவே யன்றி எங்கும் தாந்திரிக தீக்ஷையும் தாந்திரிக பஸ்மமும் புகழப்படவேயில்லை. மற்று இகழப்பட்டது பலவசனங்களிலுண்டு அவற்றின்சிலவற்றை காட்டுவோம் நிற்க. இவ்வாதியார்கொண்ட சிவாகமங்கள் சுவதப்பிரமாணங்களா? அல்லது பரப்பிரமாணங்களா? முதல்வழிகூடாது. வேதங்களைப்போல்அநாதிநித்திய சுவயம்புவாகாமையானும் அந்தரவிப்பிரதிஷேதம் என்றகுற்றம் நிறைந்தமையானும் ஒன்றுக்கொன்று விரோதப்படுமாதலால், பரதப்பிரமாணம் எனில், புராணாதிகளில் நிந்தைகள் அளவிறந்து கிடத்தலால் அவைகளுக்குத்தப்பித் தலையெடுத்துப் பிழைக்கவேண்டி வேதநாயகன் திருவடிநிழலில் அடைக்கலம்புகுந்து தமக்குச்சிறிதும் சம்மந்தமற்ற வைதிகப்பெயரைக் கடன்வாங்கிக்கொள்ளவேண்டி அதனைப் பலவாறு வழிபடவேண்டும். கற்பழிந்து சூலடைந்தபேதை இவ்வுண்மைமணாளன் அறியாமல் அவனிடம் உள்ளபடி தனக்கில்லாத அன்பை வெளிக்காட்டி அவனைமயக்கி அவனைவழிபட்டுப் பலவழிபுகழ்ந்து தனதுசூலை அவன்றனதென நம்புமாறு நடித்து அவனைக்கொண்டே தனது சோரபுருடனிடம் கிடைத்தபுதல்வரைத் தமதுபிள்ளையென சீராட்டச் செய்யும் தன்மைபோல இதுவாகும். ஆதலாற்றான் சிவபுராணம், வாயுசங்கிதை பூர்வபாகம், கூர்மபுராணம், சூதசங்கிதை இவைகள் முற்றிலும் வேதபாஹ்யம் என்றும், அவைதிகம் என்றும், பலவிதமாகப் புறக்கணித்தொதுக்கிய காமிகாதி தந்திரங்களை யனுஷ்டிக்கும் தாந்திரிகரையும் வைதிக அடைசேர்த்து சைவராக்கியும் அதிற்கண்டவவைதிக சித்தாந்தத்தையும் வைதிகவடைகொண்ட சைவமுமாக்கி இவ்வாதியராதி தற்கால சைவர் வழங்கிவருகிறார்கள். இவ்விதம் வேதசம்பந்தம் பெறாத வோர்சுவடி வேதத்துள்ள பஸ்மாதிகளுக்குமட்டில் சமம்ஆனதால், அதுவேயாகவாவது, அதன் மேலேயாகவாவதாகுமாயின், சில அவயவசாம்யத்தால் மிருகம் மனிதனும், விலைமங்கை குலமங்கையும் ஆகலாம். அந்தோ! கொடிதுகொடிது!! இங்ஙனம் வேதபுராணேதிஹாஸங்களில் புகழப்பட்டது வைதிகபாசுபதமேயன்றி அவைதிககாமிகாதிகளிற் கூறியவையன்று. ஆதலாற்றான் உண்மை நாயன்மார் எவரும் அவற்றுளும் முக்கியமாய் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீஞானசம்பந்தபிரானும் வேதவைதிகங்களைப் புகழ்ந்தோதினான்றி எங்கும் தந்திர தாந்திரிகர்களைப் புகழ்ந்தாரில்லை. எங்கும் மூவரும் பாடல்கள் தோறும் 'ஈசன் வேதகானம்செய்பவன்' என்றும், வேதியன் என்றும், முப்புரிநூல் தரித்தவன் என்றும் அநேகதிருப்பதிகளில் அந்தணர் வேள்வி செய்து வைபவம் பெற்றவர் என்றும், பலவிதமாக வர்ணித்துவரும் நீராக, அவர் எவ்விடத்தும் எவரையும சைவர்என்றும், சைவநெறிக்கடைப்பிடித்தவர் என்றும் ஆகமதீக்ஷிதர் என்றும் பாடினாரில்லை. ஆதலால் இவ்வாதி இங்கெடுத்துக் காட்டவந்த சங்கர சம்மிதாவசனத்தால் ஆசங்கராதிகாரிகமான ஆகமத்துக்கும் அதில்கண்ட ஹௌத்திரியாதிதீக்ஷைகளுக்கும் சம்பந்தம் சிறிதுமில்லை என்க. மேலே இவருக்கென ஒரு பெரியவித்துவானை எடுத்து அவரும் தமதுகருத்துக்கிணங்கினார் என்றும் அவர் மூன்னூறவண்டி சுவடிவைத்திருந்தவர் எனவும் எழுதி எட்டைநிறைத்தார். இது மிக வியப்பே. மூன்றுமலைகளாக மூன்றுவேதங்களையும் இந்திரனிடம் கற்றபாரத்துவாஜருக்கும் இவர் கர்ணபரம்பரைக் கதையில் மூன்னூறுவண்டி ஓலை ஏற்றிய புலவன்மேலே அப் பரத்துவாஜரே தனது திவ்யசூத்திரத்தில் பஸ்மதாரணவிதியைச் சொல்லியிருக்க அவருக்கும்மேலாக இவர்கனவுகண்ட அருணந்தியார் சொல்மிக்க சிலாக்யமான ஓர்பிரயாணமோ? மேலும் இவ்வருணந்தியாராதியோர் சித்தாந்தத்துக்கும் இவர் தமதாசிரியரெனச்சொல்லும் ஸ்ரீகண்டமுனிவர் சித்தாந்தத்துக்கும் உள்ளவேற்றுமை விரிவாக சமயம்நேர்ந்துழிகாட்டுவோம். மேலும் இவர்கொண்ட பிரமாணமான அவைதிகாகமங்களும் 'எவன் எவ்வருணத்தில் பிறந்தான், அவன் அதிலேயேதீக்ஷைபெற்று ஆசாரியாபிஷேகம்பெற்றால்அவன் அவ்வருணத்திற்கேயாயினும் அதன்கீழ்வருணத்துக்காயினும் ஆசிரியனாகலாமேயன்றி சாதுர்வருணாசிரமசாரங்

களை என்றும் கடக்கக்கூடாது என்றும் பலவிடங்களில் ஊதிவணபூாஸ்ரூமா வாமாது உநஸாவி நஉவெயெசு|| மேற்கண்ட வருணாச்சிரமங்களை மனதாலும் மீறக்கூடாது. என்றும் புகழ்ந்திருக்க அதற்கு நேர்மாறாக அருணந்தியார் முதலியஇவாகுருசந்ததியார் எப்படிக் கீழ்வருணத்தார்க்கு ச்சீடரானார்? அன்று அவர் ஆனமையால் அவர் சந்ததிக்கு அது தகுமென்பதே போதும். இவர் யாழ்ப்பாணத்தாறு முகநாவலரை பரமாசாரியராய்க்கொண்டு அவர் திருவாக்கை மேற்கோளாக்கினார். நிற்க; இவர் ஓரிடம் தமது மதம் ஸ்ரீகண்டமதமென்றும், மற்றோரிடம் மெய்கண்டமதமென்றும் சொல்லிவருகிறார். இவையிரண்டு மதங்களும் தீயும் தண்ணீரும்போல முற்றிலும் ஒன்றோடொன்று முரணும். ஸ்ரீஹரதத்தசுவாமிகள் ஸ்ரீமதப்பயதீக்ஷிதமூர்த்திகளாதியோர் அனேகமாய் ஸ்ரீகண்டமதத்தையே பெரும்பான்மையில் அனுசரித்தவர். இவர்கொண்டாடும் காமிகாதி தந்திரங்களை அவர் எள்ளளவேனும் மதிப்பாரில்லை. ஸ்ரீகண்டர் சதசத் ஆத்மவாதத்தையும் கேவலநிமித்தவாதத்தையும் மறுத்தார். அது அவரியற்றிய பிரமசூத்திரபாஷ்யம் 2-ம் அத்தியாயம் 2.வது பாதத்தில் "ஓெநகூஷிஞலஂஹவாசு". இல்லை ஒன்றின்மை யாமையால்' என்றசூத்திரத்தில்சதசத்வாதமும் அதனடுத்த வதூ¬ஙஸா௦ஜஸ்யாசு 'பதிக்கொவ்வாமையா' லென்றவதிகரணத்தில் கேவலநிமித்த காரணவாதமும் 'நாஹா உவஞஸு' (சூன்னியமல்ல காணப்படுதலால்) என்றசூத்திரத்தில் பிரபஞ்ச சூன்யவாதத்தையும் மறுத்தார். அன்றி முதலாவது அத்தியாயம் நான்காம்பாதத்தில் பிரகிருத்யதிகரணத்தில் "ஈசன் கேவலநிமித்தம்' என்றதையும் மறுத்தார். இன்னும் பாசுபத்யதிகரணத்தில் தொடங்கும்பொழுதே 'கேவலநிமித்தகாரணவாதிகள் கேவலம் தாந்திரிகர்' என்றும் குறித்தார். ஸ்ரீமத் தீக்ஷிதமூர்த்திகளும் சிவதத்வவிவேகத்தில் 'பதிக்கொவ்வாமையால்' என்றசூத்திரம் அவைதிக பாசுபதத்தையே நிந்தித்ததெனக்கொண்டு அந்தவாக்கியத்திற்குப்பதிலாக அந்த அவைதிகாகமங்களிலேயே 'கேவலநிமித்தகாரணன் ஈசன்எனப்பட்டது'என்றார். ஆதல்பற்றி ஸ்பஷ்டமாக கேவலநிமித்தகாரணஞ்செய்யும் சிவாகமங்கள் ஸ்ரீமத் தீக்ஷிதர்அவர்கள் உபன்யசித்தபடி சுஓஸவ்யூஓ3 தசுகுயி த௦வெஉவாஹ்ூ௦தயெதாசு" 'இவை அஸேவ்யங்கள்; 'இவைகளை வேதபாஹ்யங்கள்' என்றவசனத்தால் காமிகாதிகள் அவைதிகங்களென்றாயிற்று அங்ஙனமிருக்க எந்தவைதிகநூலும் அவைதிகநூலைத்தழுவுகிறதெனல் 'காமன்காதலிகபந்தனையாசித்தாள்' என்றதை ஒக்கும். வேதங்கள் அவைதிகாகமங்களில் சொன்னவிஷயங்களை அனுவதிப்பதாகக்கூறத்துணிந்த இந்தவிதண்டாபண்டிதர் கண்டெடுத்த பிரமாணங்கள் அப்பிரமாணங்களேயாமென்க. மேற்கண்ட ஸ்ரீகண்டர் சித்தாந்தத்துக்கு மெய்கண்டார் சித்தாந்தம் விரோதம் உள்ளது என்பதைச்சிறிது ஸ்தாலீபுலாக நியாயத்தாற்காட்டுவோம். மெய்கண்டார் சிவஞானபோதம் ஒன்று, ஆறாம்சூத்திரங்களில், கேவலநிமித்தகாரணவாதம் ஆன்மசதசத்வாதம் சொல்லப்படுதலாலும், உலகம் அசத்தெனப்படுதலாலும் ஸ்ரீகண்டருடன் இம்மதம் முரணும் என்பதிற்றடையில்லை. மற்றும் அவர் ஈசுரான், பரிணாமியுபாதானம் உலகத்துக்கென்பரேல் இவர் ஆகமிகராவார்? மேலும் அவர்வேதங்கள் அபௌருஷேயங்கள் என்றனரே, இவர் அங்ஙனம்கொள்வாரா? பின்னும் அவர் ஸ்பஷ்டமாய் வாயுசங்கிதையில் வைதிகாகமார்த்தம் சொல்லுமிடத்துள்ள

சக்திதத்துவம் முதல் பிருதிவி ஈறாகவுள்ளதெல்லாம் சிவதத்துவத்தில் தோன்றியதாகையால் சிவனாலேதானே அது 'மண்ணால்குடமாதி வியாபிக்கப்பட்டது' என்றவசனத்தை எடுத்து ஈசன் நிமித்தோபாதானம் எனநாட்டினார். ஆகையால் வைதிகசிவாகம பக்ஷபாதியாகின்றார். அவைதிக சிவாகமங்களை முற்றிலும் கேவலநிமித்தகாரண வாததூஷண வ்யாஜத்தால் நிந்தைசெய்தவர் ஸ்ரீகண்டமுனிவர். இவர் முன்னூறுவண்டி சுவடிக்காரர் எனப்புகழ்ந்த அருணந்தியார் அந்தோ! ஸ்ரீகண்டர் கண்டசற்சித்தாந்தத்துக்கு நேர் விரோதவழி மெய்கண்டார்மதம் என்றார். இங்ஙனமிருக்கும் இருமதமும் இவருக்கொருமதமானது மிகவும் விந்தையே. மேலும் ஈசன் உலகவுபாதானம் என்பதற்கு ஸ்ரீகண்டயோகிகள் வேதவாக்கியங்களைப் பிரமாணமாகக் காட்டவெழுந்து (ஸவெ-ூாவெஙா-ஊ்ரு:) 'எல்லாம்ருத்திரன்' என்பதாதி மந்திரங்களையே பிரமாணமாக எடுத்து 'அவ்வீசன் நிமித்தகாரணனாய் விசுவாதிகனும் விசுவேசுவரனும் ஆவான்' என்றும், உபாதானமாதலால் சர்வரூபனும் என்றும் சாற்றினர். உண்மைநாயன்மார்களும் அநேகவிடங்களில் 'உலகமீசன் சொரூபம்'என்று நிரூபித்தனரே; அங்ஙனமிருக்க அம்மகான்கள் ஸ்ரீகண்டராதி வடநூலாசிரியர் முதலியபெரியோர்கள் கொண்டவாறு அபின்னநிமித்தோபாதான வாதபூஷிதமும்சர்வப்பிரமாணங்களுட் சிறந்ததும், சுவதப்பிரமாணமும், அபௌருஷேயமுமான வேதம் சிவாத்துவிதிகளுக்கோர் நிகரற்றநிதியாயிருக்க, அதைவிட்டு வைதிகனாயுள்ளான் அவைதிகாகமங்களைத் தழுவவேண்டிய தௌர்ப்பாக்கியம் என்றும் பெறான். ஈசன் உலகக்குபாதானமும் என்பதற்கு ஆசிரியர் ஸ்ரீகண்டமூர்த்திகள் எடுத்த ஸ்ரீருத்திராதி பிரமாணங்களை முற்றிலும் தழுவியதில் தேவாரங்களை யுதகரித்து அவற்றிற்கெல்லாம் கேவலநிமித்தகாரணவாதம் செய்யும் அவைதிகாகமிகர்கள் செய்யப்புகும் சமாதானத்தை எதிர்பார்ப்பாம். எங்கும் மூவர்தேவாரம் ஈசனைச்சேதனாசேதனப் பிரபஞ்சரூபனாகக் குறித்தபோதிலும் சமுத்திரகலசநியாயத்தால் சிலவற்றை இங்குகாட்டுவோம். ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திகள் பிரமாணங்களுள் வேதத்தையே பிரமாணமாகக்கொண்டார் என்பதற்கு முன்னரே அவர்கள்திருவாக்கும் எங்கும் வேதம் வைதிகர்களைப் புகழ்வதைக் குறித்தோம். ஈண்டு ஈசன் ஜகதுபாதானம் என்றதற்குச் சில பிரமாணங்களைக்குறிப்பாம்.

திருவெண்காட்டுத் திருப்பதிகத்தில்.

மண்ணொடுநீரனல்காலோடாகாயமதியிரவி
யெண்ணில்வருமியமானிகபரமுமெண்டிசையும்
பெண்ணினொடாண்பெருமையொடுசிறுமையுமாம்பேராளன்

திருப்பிரமபுரப்பதிகத்தில்:—

"புவிமுதலைம்பூதமாய்ப் புலனைந்தாய்நிலனைந்தாய்க்கரண
நான்காயவையவை சேர்பயனுருவாயல்லவுருவாய் நின்றான
மருங்கோயி"

திருக்கடைமுடித்திருப்பதிகத்தில்:—

'மறையவனுலகவன்மாயமவன்'

திருமணஞ்சேரிதிருப்பதிகத்தில்:—

'எல்லாமாமெம்பெருமான்கழலேத்துமே'

திருவையாறு திருப்பதிகத்தில்:—

'வெதியாகிவிண்ணாகிமண்ணோடெரிகாற்றுமாயாகிநின்றானு
மையாறுடையையனே'

திருவிளைநகர் திருப்பதிகத்தில்:—

'மூவருமவரென்னவுமுதல்வருமிவரென்னவும்'

தலைச்செங்காடு திருப்பதிகத்தில்:—

'நிலநீரொடாகாசமனல்காலாகிநின்று'

திருவீழிமிழலை திருப்பதிகத்தில்

"ஈறாய்முதலொன்றாயிருபெண்ணாண்குணமூன்றாய்
மாறாமறைநான்காய்வருபூதம்மவையைந்தா
யாறார்சுவையேழோசையொடெட்டுத்திசைதானாய்
வேறாயுடனானானிடம்வீழிம்மிழலையே" என்றும்

மண்ணும்புனலுயிருவரும்காற்றுஞ்சுடர்மூன்றும்
விண்ணும்முழுதானானிடம்வீழிம்மிழலையே.

பேணுபெருந்துறை திருப்பதிகத்தில்.

'மூவருமாகியிருவருமாகிமுதல்வனுமாய்நின்றமூர்த்தி'

திருச்சாத்தமங்கை திருப்பதிகத்தில்.

வேதமாய் வேள்வியாகி விளங்கும் பொருள் வீடதாகிச்
சோதியாய்

திருவாலவாய் திருப்பதிகத்தில்

குற்றநீ குணங்கணீ கூடலாலவாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்பமென்றிவை
முற்றநீ புகழ்ந்து முன்னுரைப்பதென்முகம்மனே.

திருமுதுகுன்றம் திருப்பதிகத்தில்

தேவராயுமசுரராயுஞ் சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும்விண்ணெரிகானீரு
மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னு
மூவராயமுதலொருவன்மேயதுமுதுகுன்றே.

"முற்றுமாகி வேறுமானான் மேயதுமுதுகுன்றே"

என்றும் இவ்வாறே பலவிடங்களில் எல்லாமீசன் சொரூபமென அனுக்கிரகித்த தேவாரங்கள் பலவாம். மேலும் ஸ்ரீமத் ஆளுடைய பிள்ளையார் தமே பலவிடங்களில் வேத வழி வழிபட்டார்க்கே ஈசன் அருள்கிடைக்கும் என்றும் ஆதியில் நால்வருக்கு ஈசன் உபதேசித்தது வேதவேதாந்த வேதங்களே என்று சொல்வதுமன்றி, குறித்தது ஸ்ரீ மார்க்கண்டேயராதிகள் வேதங்களாலேயே வழிப்பட்டார் என்றும் அது 'பொய்யாமொழியென்றும் வேதங்களில்கண்டபடி வேள்விகளைச் செய்வேன் ஈசனுருக்கு முக்கியார்கள்' என்றும் சநகாதிகட்கு ஆகம உபதேசம் மந்திரமாவது நீறு என்றும் வேதவிதிகொண்டே தரிக்கப்படுவேது திருநீறென்றும் நன்கு நிரூபித் தனுக்கிரகித்திருக்கின்றார். அவ்வசனங்கள் அளவிறந்தன வாகையாலும் அவைதமிழுலகத்தே பிறந்து அங்கே வாழும் நமது வாதியாருக்கு அதிசுலபமாதலாலும் அவைகளையறிந்தே இவர்விதண்டாவாதம் செய்வராதலாலும் இவருக்கு இவ்வளவுகாட்டினால் போதும் என்று இம்மட்டோடு இதைவிட்டாம். இங்கிவர் வருணாசிரம முறைகடந்து ஆரியாவர்த்த எல்லைகடந்து இலங்கைக்குச்சென்றாற்போல,வருணவரை ஆசிரியராயக்கொண்டு அவ்வழி ஒழுக அவரைக்குருவாக்கி மேற்கோள் எடுத்தமையால் அதற்குநேராகயாம் ஈசனாணையாகிய மேற்கண்டவரைக்கடவாது எங்கள் குலபூஷணனாய பரசமய பஞ்சானனத்தையே இவ்வுபதேசம் செய்த மகாசிரியனாகவும் கொண்டு எங்களாசிரியர் கண்டவழிக்கு அவர்திருவாக்கை மேற்கோளாக்கிக்காட்டினோம். இனி உம்மினத்தார் மனங்குளிர அவரவரதிகாரத்துக்கேற்றவாறு அப்பர் திருவாக்கிலும் ஸ்ரீ சுந்தரமூர்த்திகள், திருவாக்கிலும் சிலவற்றை உலகவுபாதானம் ஈசன் என்பதற்குப் பிரமாணங்களாகக்காட்டுவோம். அனேகமாய் ஜிஹ்வாராஜா தேவாரங்களெல்லாம் ஈசனைச் சர்வசொரூபன் என்று பெரும்பான்மையில் நிரூபிக்கின்றமையால் அவற்றின் இயலறிவிக்க ஒரு சிறிதேகாட்டுவோம்.

இருநிலனாய்த்தீயாகிநீருமாகி யியமானனாயெறியும்காற்றுமாகி, யருநிலைய திங்களாய்ஞாயிறாகி யாகாசமாயட்டமூர்த்தியாகிப், பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும் பிறருருவுந்தம்முருவும்தாமேயாகி, நெருநலையாயின்றாகிநாளையாகி நிமிர்புஞ்சடையடிகணின்றவாறே. (௧)

மண்ணாகிவிண்ணாகிமலையுமாகி வயிரமுமாமாணிக்கந்தானேயாகிக், கண்ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக் கலையாகிக் கலைஞானந்தானேயாகி, பெண்ணாகிப்பெணணுக்கோராணுமாகிப் பிரளயத்துக்கப்பாலோரண்டமாகி, யெண்ணாகியெண்ணுக்கோரெழுத்துமாகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௨)

கல்லாகிக்களறாகிக்கானுமாகிக் காவிரியாய்க்காலாறாய்க் கழியுமாகிப், புல்லாகிப்புதலாகிப்பூடுமாகிப் புறமாகிப்புரமூன்றுங்கெடுத்தானாகிச், சொல்லாகிச்சொல்லுக்கோர்பொருளுமாகிச், சுலாவாகிச்சுலாவுக்கோர் சூழலாகி நெல்லாகிநிலனாகிநீருமாகி நெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிகணின்றவாறே. (௩)

காற்றாகிக்கார்முகிலாய்க்காலமூன்றாய்க் கனவாகி நனவாகிக் சங்குலாகிக் கூற்றாகிக் கூற்றுதைத்தகொல்களிறுமாகிக் குறைகடலாய்க் குறைகடற்கோர் கோமானுமாய் நீற்றானாய் நீறேற்றமேனியாகி நீள்விசும்பாய் நீள்விசும்பினுச்சியாகி யேற்றானாயேறூர்ந்தசெல்வனாகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௪)

தீயாகி நீராகித் திண்மையாகித் திசையாகி யத்திசைக்கோர் தெய்வமாகித் தாயாகித் தந்தையாய்ச் சர்வமாகித்

தாரகையுஞாயிறுந் தண்மதியுமாகிக் காயாகிப்பழமாகிப் பழத்திணின்ற விரதங்களுகர்வானுந் தானேயாகி நீயாகி நானுமாகி நேர்மையாகி நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகணின்றவாறே. (௫)

அங்கமாயாதியாய் வேதமாகி யருமறையோ டைம்பூதந் தானேயாகிப் பங்கமாய்ப் பலசொல்லுந்தானேயாகிப் பான்மதியோடாதியாய்ப் பான்மையாகிக் கங்கையாய்க் காவிரியாய்க் கன்னியாகிக் கடலாகி மலையாகிக்கழியுமாகி யெங்குமாயேறூர்ந்தசெல்வனாகி யெழுஞ்சுடரா யெம்மடிகணின்றவாறே. (௬)

மாதாபிதாவாகி மக்களாகிமறிகடலுமால் விசும்புந்தானேயாகிக் கோதாவிரியாய்க்குமரியாகிக் கொல்புலித்தோலாடைக் குழகனாகிப் போதாய மலர்கொண்டு போற்றிநின்று புனைவார் பிறப்பறுக்கும் புனிதனாகி யாதானுமென நினைந்தார்க்கெளிதேயாகியழல்வண்ண வண்ணர்தாநின்றவாறே. (௭)

ஆவாகி யாவினிலைந்துமாகி யறிவாகி யழலாகியவியுமாகி நாவாகி நாவுக்கோ ருரையுமாகி நாதனாய் வேதத்தினுள்ளோனாகிப் பூவாகிப் பூவுக்கோர் நாற்றமாகிப் புக்குளால்வாசமாய் நின்றானாகித் தேவாகித்தேவர்முதலுமாகிச் செழுஞ்சுடராய்ச் சென்றடிகணின்றவாறே. (௮)

நீராகி நீளகலந்தானேயாகி நிழலாகி நீள்விசும்பினுச்சியாகிப் பேராகிப் பேருக்கோர்பெருமையாகிப் பெருமதில்கண்மூன்றினையுமெய்தானாகியாரேனுந்தன்னடைந்தார் தம்மையெல்லா மாட்கொள்ளவல்லவெம் மீசனார் தாம்பாராகி பண்ணாகிப் பாடலாகிப்பரஞ்சுடராய்ச் சென்றடிகணின்றவாறே. (௯)

மாலாகி நான்முகனாய் மாபூதமாய் மருக்கமாயருக்கமாய் மகிழ்வுமாகிப் பாலாகி யெண்டிசைக்குமெல்லையாகிப் பரப்பாகிப் பரலோகந்தானேயாகிப் பூலோகபுவலோக சுவலோகமாய்ப் பூதங்களாய்ப் புராணன்றானேயாகியேலாதனவெலாமேல்விப்பானா யெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௰)

திருமழுமாற்றத் திருத்தாண்டகத்தில்.

‘நிற்பனவும்நடப்பனவும்நிலனுநீரும்’

‘நெருப்பினொடுகாற்றாகிநெடுவானாகி’

ஆதிபுராணத் திருக்குறுந்தொகையில்.

‘சிவனைச் சிவனைச் சிந்திப்பார்களே’

போற்றித்திருத்தாண்டகத்தில்.

‘பொறையுடையபூமிநீரானாய்போற்றி’

திருக்கழுக்குன்றப்பதிகத்தில்.

‘சொல்லொடுபொருளுமானாய்போற்றி’

திருப்பாசூர்ப்பதிகத்தில்.

‘விண்ணாகிநிலனாகிவிசும்புமாகி’

‘வேதமோர்நான்காயாரங்கமாகி’

திருவாலங்காடு பதிகத்தில்.

‘ஒன்றாயுலகனைத்தும்தாமேயாகி’

திருமாற்பேறுபதிகத்தில்.

‘விண்ணேமண்ணாகிவிளங்குசெம்பொன்’

திருக்கச்சிமேற்றிருட்பதிகத்தில்.

மாயனாய்மாலனாகி மலரவனாகிமண்ணாய்த் தேயமாய்திசையெட்டாகித் தீர்த்தமாய்திரிதற்கின்றகாயமாய் காயத்துள்ளார்

திருக்கச்சியேகம்பப் பதிகத்தில்.

‘வாசனைமலைநிலநீர்தீவளியாகாசமாம்’

திருவதிகைப்பதிகத்தில்.

‘எல்லாஞ்சிவனெனநின்றாய்போற்றி’

திருப்புத்தூர்பதிகத்தில்.

‘புவனமேழும், விரிந்துபல்வுயிராகி விளங்கினான்காண்’ ‘மாமறைகளாயவன்காண்’

திருமறைக்காடுபதிகத்தில்.

‘மறுமையுமிம்மையுமாவார்’

வலிவலம்பதிகத்தில்.

‘நல்லான்காணான்மறைகளாயினான்காண்’ ‘ஊனவன்காணுடறனக்கோருயிரானான் (ஏகாத்துமா) காண் உள்ளவன்காணில்லவன்காண் (அத்துவிதம்) (மீண்டும்) உய்த்தவள்காணுடறனக்கோருயிரானான்காண்’ ‘ஏழுலகுமாயினான்காண்பதியவன்காண்பழமவன்காணிரதந்தான்காண்’

பெருவேளூர்பதிகத்தில்

பிண்டமேயாயினானைப் பெருவேளூர் பேணினானை, யண்டமாமாதியானை

திருவாரூர்பதிகத்தில்

ஏற்றானை யேழுலகுமானான்றன்னை மந்திரமுமறைப்பொருளுமானான்றன்னை மறுமையு மிம்மையு மானான்றன்னை, திசையனைத்துமாயனைத்து மானார்போலும் சொல்லாகிச் சொற்பொருளாய்நின்றார்போலும் நீதியாய்நிலனாகிநெருப்பாய்நீராய் நிறைகாலாயினாயிவற்றினியமமாகிப் பாதியா யொன்றாகியிரண்டாய் மூன்றாய்ப்பரமாணுவாய்ப்பழுத்த பண்களாகிச் சோதியா யிருளாகிச் சுவைகளாகிச் சுவைகலந்த வப்பாலாய் வீடாய்வீட்டினாதியாயந்தமாய் நின்றான் றன்னையாரூரிற்கண்டடியேன்னயர்த்தவாறே.

திருப்பயற்றூர்பதிகத்தில்

ஞாயிறாய் நமனுமாகி வருணனாய்ச்சோமனாகித்தீயறா நிருதிவாயுத்திப் பியசாந்தனாகிப் பேயறாக் காட்டிலாடும் பிஞ்ஞகன் ஆவியாயவியுமாகியருக்கமாய்ப்பெருக்கமாகிப்பாவியாய் பாவந்தீர்க்கும்பரமனாய் பிரமனாகி சிந்தையும் சிவமுமாவார்.

திருவீழிமிழலை திருப்பதிகத்தில்

பல்லுயிராய்நெடுவெளியாய்ப்பரந்துநின்ற

திருச்சோற்றுத்துறை பதிகத்தில்

‘பந்தமாய் வீடுமாகிபரமபரமாகிநின்று’

திருவாலம்பொழில் பதிகத்தில்

உணர்வெலாமானானை உருமூன்றாயுணர்வின்கண்ணொன்றானை

திருவையாற்று பதிகத்தில்

ஓதியஞானமு ஞானப்பொருளு மொலிசிறந்த வேதியர்வேத மும் வேள்வியுமாவன விண்ணு மண்ணுஞ் சோதியஞ்செழுஞ் சுடர் ஞாயிறு மொப்பனதாமதியோ, டாதியுமந்தமுமானவை யாரனடித்தலமே.

திருநாரையூர்ப்பதிகத்தில்.

'மலையானைக் கடலானை மனத்துளானை, 'உளவானைப்பகை யானை யுயிரானானை யுள்ளானைப்புறத்தானை'

திருநீடூர்ப்பதிகம்.

'நன்றாங் கரிந்தவர்க்குந்தானேயாகி நல்வினையுந் தீவினையுமானா ன்றன்னை திறமாயவெத்திசையுந்தானேயாகி

இவ்விதம் அளவிறந்தபடி வசனங்கள் உள்ளவவைகளை இச்சிறுநூல் தம்முள் அடக்காதுபற்றி இம்மட்டோடு விட்ட தனம். சுந்தரர்திருவாக்கையும் ஸ்தாலீபுலாகநியாயத்தால் சிறிதுகாட்டுவோம். ஸ்ரீசுந்தரமூர்த்திகளும் அபின்னநிமித்தோ பாதானவாதியான வைதிகபாசுபதரேயன்றி இவ்வாதியார் கொண்டபடி அவைதிகரல்லவென்றதற்காக இவ்விஷயங் கள் காட்டப்படுகின்றன. சுந்தரர்திருவாக்கில்.

திருக்கோலக்கா திருப்பதிகத்தில்.

'காற்றுத்தீப்புனலாகிநின்றானை'

திருநின்றியூர்த்திருப்பதிகத்தில்.

'காலமுஞாயிறுமாகிநின்றார்கழல்'

திருநீடூர்திருப்பதிகத்தில்.

'காற்றுமாய்கனலாய்'

கானாட்டுமுள்ளூர் திருப்பதிகத்தில்.

உலந்தானாய் ஊர்வனவு நிற்பனவு மூழிகளுந் தானாய்ப், பொருமேவு கடலாகிப் பூதங்களைந்தாய் புனலாகி அனலாகிப் பூதங்களைந்தாய் நாளையின்று நெருநலாகாயமாகி ஞாயிறாய் மதியமாய் நின்றவெம்பரனை முன்னிலையாய் முழுதுலகமாய பெருமானை பலவுருவும் தன்னுருவேயாயபெருமானை.

கற்குடி பதிகத்தில்.

"நிலனேநீர்வழிதீநெடுவானமாகிநின்ற''

திருக்கடவூர்பதிகத்தில்.

மண்ணீர்தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்பெண்ணோடாண வியாய் பிறவாயுருவானானவனே.

திருப்பரங்குன்றப்பதிகம்,

பாரொடு விண்ணும் பகலுமாகிப் பனிமால்வரையாகிப்பரவை யாகி, நீரொடு தீயும் நெடுங்காற்றுமாகி நெடுவெள்ளிடை யாகி நிலனுமாகி,

திருவதிகைவீரட்டப்பதிகம்.

நற்றுணைத் தொருவனை நாயனானை.

திருவன்பார்த்தான் பனங்காட்டூர் பதிகம்.

வெயிலாய்க்காற்றென வீசிமின்னாய் தீயெனநின்றான்''

என்பதாதிபலவாம். இங்ஙனம் இக்கலிகாலக்கொடுமையா லவதரித்த நவீனசைவசித்தாந்திகள் நிராதாரமதத்தை நம்பி அதில் தீக்ஷைபெற்று ஈசாஞையான வேதநெறிகடவாது உலகத்தாருய்யுமாறு பரமோபகாரம்புரிந்து ஸ்ரீமத் கௌணியர்குல சூளாமணிமுதலிய பரமபாவன சாம்பவசிகாமணிகளைத் தமதுசமயத்துக்காசாரியர் எனவுரிமைகொண்டாடுவதும், சுத்தவைதிக பாசுபத சத்சம்பிரதாயப் பிரவர்த்தக ஸ்ரீசுவேதமுனிவர் பாதசேகரரான ஸ்ரீகண்டமுனிகளைத் தம்மதபாடியகாரர் எனப்பகட்டுவதும், சோற்றைக்காட்டிக் களியைத்திணிக்கும் கதையை ஒத்ததாயிற்று. மேற்கண்டகாரணங்களாலும் பிரமாணங்களாலும் வைதிகபாசுபதம், அத்தியாசிரமம், சிரோவிரதம், சாம்பவம், விரஜாதீக்ஷை, வைதிகதீக்ஷை முதலிய சொற்கள்யாவும் வைதிகவருணாசிரமங்களுக்குட்பட்டு அவ்வருணத்திற்கேற்ற வுபனயனாதி ஸம்ஸ்காரபூர்வமாக, அவ்வவ்வருணங்களுக்கும் ஆசிரமங்களுக்கும் ஏற்றவாறு அதர்வசிரம், ஜாபாலம், காலாக்னிருத்திரம் முதலியவுபநிடதங்களில் சொல்லியமந்திரங்களைக்கொண்டு திருநீறணிதல், திருக்கண் மணிமாலைதரித்தல், சுத்தவைதிகநெறிமாறாது சிவலிங்கார்ச்சனம், ஸ்ரீபஞ்சாக்ஷரம்ஜபித்தல், ஸ்ரீவில்வதாரணமாகிய பஞ்சபஞ்சானன சின்னங்களையே குறிப்பதாம் என வைரப்பர்வதமாக நாட்டப்பட்டது. இங்ஙனம் சர்வஆசாரியர்களும் ஒருவழிசெல்ல சர்வவிருத்தமாய்சொல்வது இவருக்கும் இவரினத்தாருக்குமே நகையைவிளைக்காதொழியாதாம்? இங்ஙனமிருக்கத் தமக்குச்சிறிதும்சம்பந்தமற்ற சுத்தவைதிக பாசுபதத்தைத் தம்மதாகக்கொண்டு வாதிக்கவெழுந்து அதற்கு அருணந்தியாரைப் பிரமாணமாக எடுத்தது மிகவும்வியக்கத்தக்கதே. மேலும் அவராகிலும் ஆரியதேசத்துதித்தபாக்கியம்பெற்றவர். மேலே இவ்வாதிகாட்டிய பரமாசாரியரோ, அவ்வளவேனும் பெறாதவர். ஆனால் இவருக்கும் அந்தபாக்கியம் குறையுமாகவே தம்மட்டில் ஆசிரியராக அவரைக் கொள்ளலாமேயன்றி அனாதிபரம்பரையாய் ஆரியாவர்த்தவாசிகளான பரமபாவனவைதிகசிகாமணிகளுக்கு இவ்விலங்கா வாசியுபதேசம் சரஸ்வதிதேவிக்குச் சூர்ப்பணகை யுபதேசித்தாற்போல வாகுமல்லவா? அம்மட்டோ, நமக்கெவ்விதத்துவம் ஆரியதேசசம்பந்தம சொல்லால் ஆவது அமையும்என்றுஅவாவுற்று அந்தோ ஆரியதேசத்தில் கையைப்புரட்டிக் கடைனடுவேசெலுத்தியதும் அல்லாமல் அம்மம்ம இப்பரதகண்ட புண்ணிய பூமியின் முகமென வோரிடத்தைக்குறித்து சித்திரவதைசெய்தாற்போல அப்போலி முகமண்டலத்தை உவர்க்கடலில் அமிழ்த்தி மனமகிழ்ந்தார். பாருங்கள்! இன்றுவரை எவருமறியாதபடி இலங்கையை 'பரதகண்ட' மென்னும் சௌந்தரியமங்கையின் நாஸிகாபரணம்பொலிலங்கும் 'இலங்கையிலே' என்று புகழ்ந்தார்.

இன்னும் வரும்.